**அநுராதபுரம் மாநகர சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 06 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 ஆகஸ்ட் 08 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 31 ஆந் திகதியும் முதல்வருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயம்

மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய விளைச்சல் வரி ரூபா 403,348 மற்றும் மீளாய்வாண்டில் விளைச்சல் வரி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வருமானம் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இணங்குகின்றேன் 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும். |
| (ii) | 2017 ஆம் ஆண்டின் ஏனைய வருமானங்களிலிருந்து கிடைத்த நிதி ஏற்பாடுகளின் கீழ் செயற்படுத்தப்பட்ட 17 செயற் திட்டங்களுக்குரிய செலுத்த வேண்டிய ரூபா 21,801,992 ஆன தொகை கடன்கொடுத்தொராக காண்பிக்கப்பட்டிருந்த போதும் குறித்த பணத்தை அறவிடுவதற்குரிய தரப்பினரை இனங் கண்டு கடன்கொடுத்தோராக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பணமாக பெற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். கடன் மீதிகள் இணங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய பெறவேண்டிய முத்திரை கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | பெற வேண்டிய வருமானம் சரியாக சீராக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன் |
| (iv) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 683,087 கூட்டுத்தொகையான அறவிடப்பட வேண்டிய 14 கடன் மீதிகள் அரசாங்க உத்தியோகத்தர்கள் கடன் முற்பணக் கணக்கிலிருந்து விடுபட்டிருந்தது. | விடுபட்டிருந்த கடன் மீதிகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேவண்டும். | இக்கடன் மீதி முற்பணக் கணக்கலிருந்து விடுபட்டிருந்தது. அட்டவணை சரிப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படும். |
| (v) | அநுராதபுர பொது வர்தத்க தொதி நிர்மாணத்திற்குரிய ரூபா 121,000,000 ஆனபெறுமதி மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 18,978,284 பெறுமதியான 16 கட்டிடங்கள் மற்றும் சபைக்குச் சொந்தமான ஏனைய காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். அளவீடுகள் பூர்த்தி செய்யப்பட்டு உடன மதிப்பீட்டு திணைக்களத்தினை கொண்டு மதிபபீடு செய்து அறிக்கையை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (vi) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 9,707,000 பெறுமதியான 03 உழவு இயந்திரங்கள் மற்றும் எஸ்கவேட்டர் இயந்திரமொன்று ரூபா 3,902,700 என கணக்கீடு செய்யப் பட்டிருந்தமையால் ரூபா ரூபா 5,804,300 குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது. | சகல நிலையான சொத்துக்கள் சரியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | 03 உழவு இயந்திரங்கள் மற்றும் எஸ்கவேட்டர் இயந்திர மொன்று மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (vii) | மீளாய்வாண்டின் சபையினால் அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளராருக்கு அனுப்ப வேண்டிய தேசத்தினைக் கட்டியெழுப்புதல் வரி ரூபா 213,084 ஆன பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டி ருக்கவில்லை. | செலுத்த வேண்டிய பெறுமதி இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இணங்குகின்றேன். சீர் செய்வதற்காக குறித்துக்கொள்கின்றேன் |
| (viii) | உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஈடுசெய்யப்படக்கூடிய ரூபா 202,145 ஆன பெறுமதி சேர்வரி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இணங்குகின்றேன். சீர் செய்வதற்காக குறித்துக் கொள்கின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| (ix) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடமுறைக் கணக்குகளுக்கு இடையே 4 பணமாற்றல்களான ரூபா 840,421 தொகையான தீர்வுசெய்யப்படாத செலவு பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ஏனைய பொறுப்புக்களாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | இணங்குகின்றேன். குறித்த சரிப்படுத்தல் களை சீர்செய்வதற்கு பதிவு செய்து தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள் மீதி சீர் செய்யப்பட வேண்டும். |
| (x) | உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் தவணைப்பண கொடுப்பனவு ரூபா 1,060,359 ஆன கடன்தொகையில் கழிப்பதற்குப் பதிலாக மீண்டெழும் செலவினமாக காண்பிக்கப் பட்டிருந்தது. | கடன் தவணைகளில் உள்ளடக்கப்பட்ட மூலதனக் கொடுப்பனவு இனங் காணப்பட்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2016 ஆம் ஆண்டின் பேரேட்டின் மீதிகள் சரியாக திரண்ட நிதியக் கணக்கிற்கு சீராக்கம் செய்யும் போது இடம் பெற்ற தவறொன்றாகும் |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த 10 கணக்க வியங்களின் பெறுமதி மற்றும் அவற்றுக்குரிய பதிவேடுகளில் காணப்படும் பெறுமதிக்கு இடையே ரூபா 21,245,660 ஆன வேறுபாடொன்று இருந்தது. | வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்ககளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் அட்டவணைகளின் பிரகாரம் மீதிகளை சீராக்கி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 காசேடுகளில் ரூபா 22,899,779 கூட்டுபபெறுமதி அத்திகதியில் உள்ளவாறு நிதக்கூற்றுக்களில் ரூபா 27,394,913 என காண்பிக்கப்பட்டமையால் ரூபா 4,535,136 ஆன வேறுபாடொன்று இருந்தது. | நிதிக்கூற்றுக்களில் ஐந்தொகை திகதியில் உள்ளவாறு காசேடுகளில் மீதிகள் சரியாக காண்பிக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 காசேடுகளின் மீதிகள் சமப்படுத்தும் போது இடம்பெற்ற தவறினை சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. |
| (iii) | மீளாய்வாண்டின் கழிவுப்பொருள் கட்டண வருமானப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 4,474,900 மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 4,949,864 ஆக இருந்தமையால் ரூபா 474,964 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | ஆண்டிற்குரிய வருமானத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் களி பௌசர் வருமான பதிவேட்டின் பிரகாரம் ரூபா 3,672,250 மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 7,590,756 ஆக இருந்தமையால் ரூபா 3,918,506 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | ஆண்டிற்குரிய வருமானத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்ளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 462,503,879 பெறுமதியான 13 கணக்கு விடயங்களின் சொத்துப் பதிவேடுகள், மெய்மையாய்வு அறிக்கைகள், காலப்பகுப்பாய்வு, இருப்பு பதிவேகள், மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள்,பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவு பதிவேடு, கடன் பதிவேடுகள் மற்றம் விரிவான பதிவேடுகள் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியாது இருந்தது. | நிதி கூற்றுக்களில் காணப்படுகின்ற பெறுமதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சகல சான்றுகளையும் எதிர்வரும் ஆண்டில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | வீதவரி வருமானத்தில் முன்னைய ஆண்டிற்குரிய அறவீடுகள் கணனி முறைமை மூலம் தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தமையால் நிலுவை வருமானம் ரூபா 29,184,493 அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,495,225 ஆன ஊக்குவிப்பு படிகள் கொடுப்பனவு உறுதிப்படுத்தல் தகவல்கள் மற்றம் தரவுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | அனைத்து தகவல்களையும் நாளதுவரையாக பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் முறைமை பேணிச்செல்லப்படல் வேண்டும். | முன்னைய ஆண்டுகளுக்குரிய தகவல்கள் வெவ்வேறாக கணனி தகவல் முறைமையூடாக பெற்றுக்கொள்ள முடியாமையால் இறந்த உறுதிப்படுத்தல்களை மேற்கொள்ள முடியாமல் இருந்தது. |
| (iii) | 2014 ஆம் ஆண்டு முதல் 2018 யூன் மாதம் வரையான காலப்பகுதியில் இடம்பெற்றிருந்த ரூபா 40,820,190 ஆன சம்பள மோசடியின் சரியான பெறுமதியை உறுதிப்படுத்துவதற்காக மேலும் தேவையான விபரங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் நகர சபையின் நிதியத்திற்கு இடம்பெற்ற | மோசடிகள் மற்றும் தவறுகள் வெளிப் படுத்தக்கூடிய வகை யில் போதியளவு உள்ளகக் கட்டுப்பாடொன்றை பேணிச் செல்லல் மற்றும் தேவைப் பாட்டின் பிரகாரம் புத்தகங்கள் மற்றும் | இது தொடர்பான புலனாய்வு செய்யப்படுதால் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடமிருந்தும் கணக்காய்வாளர் தரைமை அதிபதி திணைக்களத்தின் மூலம் கோரப்பட்டன. இம்மோசடியின் பெறுமதி |

| | | |
|---|---|---|
| நிதிசார் நட்டத்தை தீர்மானிக்க முடியாமல் இருந்தது. | அறிக்கைகளை நாளதுவரையாக பேணிச்செல்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். | இதுவரை உங்களது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வின் போது இனங்காணப்பட்ட பெறுமதி மாத்திரமாகும். |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | நி.பி 756(1) | மீளர்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2018 ஆம் ஆண்டிற்குரிய அறிக்கை 03 மாதங்களுக்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இல 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | 2015 மார்ச் 10 ஆம் திகதிய 03/2014 (I) ஆம் இலக்க அதி திறைசேரி செயலாளரின் அரச நிதிச் சுற்றறிக்கை | உரிய அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் இல்லாமல் அச்சுற்றறிக்கையில் பெயரிடப்படாத 12 உத்தியோகத்தர்களுக்க | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாநகர கட்டளைச் சட்டத்தின் 40(1) ஆ சாதாரண அதிகாரத்தின் கீழ் மாநகர சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ாக சபை தீர்மானத்தின் பேரில் ரூபா 4,000 மாதாந்த தொடர்பாடல் படியொன்று அங்ககரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | | அதிகாரங்களின் பிரகாரம் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பேரில் உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (உ) | 1994 யூலை ஆந் திகதிய 18 ஆம் திகதிய LG/09/07/19 ஆம் இலக்க வடமத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | கடைகளை உப குத்தகைக்கு வழங்குவது முழுமையாக தடைசெய்யப்பட்டிருந்த போதும் பொது வியாபார கடை தொகுதியின் முதலாவது கட்டத்தின் நிலமாடியில் 18 கடைகளும் இரண்டாம் மாடியில் 68 கடைகளும் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களுக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பில் புலனாய்வொன்று இடம்பெற்று வருகின்றது. |
| (ஊ) | பெறுகை வழிகாட்டல் கோவை<br>------------------------------ | | | |
| | 2.9.1 ஆம் பந்தி | சந்தை ஒப்பீட்டு முறைமையின் கீழ் கூறுவிலை கோரி கொள்வனவு செய்வதற்குரிய கூடிய பெறுகை குழுக்களின் 40 அங்கத்தவர் களுக்கு ரூபா 662,644 ஆன தொகை கொடுப்பனவு செய்ய நேர்நத்து., | சுற்றறிக்கையின் பிரகாரம் பணம் அறவிடப்பட வேண்டும் | அநுராதபுரம் மாநாகர சபை மாநகர கட்டளைச் சட்டத்தின் 229 ஆம் பிரிவின் கீழ் கேள்வி தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் மாநகர சபை இதுவரை நடவடிக்கை எடுததிருக்கவில்லை. |

## 1.5 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 1994 ஆகஸ்ட் 04 ஆந் திகதிய NCP/LG/09/07/19 ஆம் இலக்க ஆணையாளரின் சுற்றறிக்கையின் மூலம் வருமானம் சேகரிப்பதன் பேரில் ஊக்குவிப்பு கொடுப்பனவிற்காக பிரதேச சபைக்கு மாத்திரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் நகர | முறையற்ற ஊக்கவிப்பு படிகள் கொடுப்பனவு மீள அறவிடப்பட வேண்டும். | மாநகர கட்டளை சட்டத்தின் 40(1) (ஆ) சாதாரண அதிகாரத்தின் கீழ் மாநகர சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பேரில் உரிய கொடுப்பனவு மேற் |

| | | | |
|---|---|---|---|
| | சபைக்குரியதல்லாத மேற்படி சுற்றறிக்கையினை அடிப்படையாக கொண்டு ரூபா 5,036,588 ஆன ஊக்கவிப்பு படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) | மாநகர கட்டளைச் சட்டத்தின் (252ஆம் அதிகாரம்) 266 அ பிரிவின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் ஆண்டின் ஆரம்பத்தில் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படமல் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 3,654,582 தொகையான 8 வருமான விடயங்கள் பெறவேண்டிய மதிகள் மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களில் பதிவழிக்கப்பட்டிருந்தன. | முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் சகைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் புத்தகங்களீலருந்து பதிவழிக்க கூடாது. | வருமான அட்டவணை தயாரிக்கும் போது தெளிவான விளக்கமின்மை காரணமாக இந்த கிடைக்க வேண்டிய வருமானம் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. அது எதிர்வரும் ஆணடின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | பிரதி நகர பிதாவிற்கு எரிபொருள் படியொன்று வழங்குவதற்காக சட்ட ஏற்பாடுகள் இல்லாதிருக்கையில் 2018 ஏப்ரல் மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை மாதமொன்றுக்கு 200 லீற்றர் டீசல் வீதம் 1800 லீற்றர் டீசலுக்காக ரூபா 171,000 ஆன படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அதிகாரமற்ற கொடுப்பனவு பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாநகர கட்டளை சட்டத்தின் 40(1) (ஆ) சாதாரண அதிகாரத்தின் கீழ் மாநகர சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பேரில் உரிய கொடுப்பனவு மேற் கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2018 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 2086/15 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் நகர பிதாவின் தனிப்பட்ட பதவியணியின் பிரத்தியேக செயலாளருக்கு ரூபா 15,000 மற்றும் பொது மக்கள் இணைப்பாளருக்கு ரூபா 10,000 இற்கு உட்படக்கூடிய வகையில் மாதாந்தம் கொடுப்பனவு செய்ய முடியுமாக இருந்த போதும் சபையால் பிரத்தியேக செயலாளருக்கு ரூபா 20,000 மற்றும் பொது மக்கள் கூட்டிணைப்பாளருக்கு ரூபா | அதிகாரமற்ற கொடுப்பனவினை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாநகர கட்டளை சட்டத்தின் 40(1) (ஆ) சாதாரண அதிகாரத்தின் கீழ் மாநகர சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பேரில் உரிய கொடுப்பனவு மேற் கொள்ளப்பட்டிருந்தது. |

15,000 வீதம் கொடுப்பனவு செய்தமயால் ஓராண்டிற்கு ரூபா ஆண்டிற்கு ரூபா 90,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,113,853 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 73,677,445 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது மாநகர சபைக்கு 04 சக்கரத்திலான 03 உழவு இயந்திரங்கள் மற்றும் 30 குதிரை வலுவுடைய 120 எஸ்கவேட்டர் இயந்திரங்கள் 02 கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டுக் கடன் மற்றம் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 20,000,000 தொகையான கடன்தொகையில் ரூபா 9,707,000 செலவு செய்து 03 உழவு இயந்திரங்கள் மற்றும் 30 குதிரை வலுவுடைய எஸ்கவேட்டர் இயந்திரமொன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன அத்துடன் எஞ்சிய ரூபா 10,293,000 ஆன கடன் மீதி பயன்படுத்தப்பட்டு 120 குதிரை வலுவுடைய எஸ்கவேட்டர் இயந்திரம் கொள்வனவு செய்யப்படாமல் மீண்டெழும் செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | திட்டவட்டமான நோக்கங்க ளுக்காக பெற்றுக் கொள்ளப் பட்டிருந்த கடன் உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தாமை தொடர்பாக பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணப்படும் நிதி சிக்கல்கள் காரணமாக மீண்டும் தீர்வு செய்யும் நோக்கில் இப்பணம் மீண்டெழும் செலவினத்திற் காக செலவிடப்பட்டிருந்தது. |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 65,000,000 | 65,001,600 | 66,479,382 | 8,107,309 | 65,500,000 | 68,552,914 | 63,301,193 | 90,919,302 |
| (ii) | வாடகை | 24,650,000 | 23,627,664 | 14,386,113 | 42,650,051 | 24,650,000 | 25,332,031 | 19,906,664 | 47,135,639 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 15,000,000 | 14,967,545 | 151,417,176 | 2,199,994 | 15,000,000 | 15,632,224 | 14,698,340 | 3,133,877 |
| (iv) | ஏனைய வருமானம் | 32,500,000 | 30,429,416 | - | 62,947,120 | 32,500,000 | 40,573,246 | 74,615,304 | 28,905,061 |
| | மொத்தம் | 137,150,000 | 134,026,225 | 232,282,671 | 115,904,474 | 137,650,000 | 150,090,415 | 172,521,501 | 170,093,879 |

### 2.3.2 வரி மற்றும் வீதவரி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 ஆம் ஆண்டின் பின்னர் ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆதனங்கள் மதிப்பீடு செய்வதற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வீதவரி அலகு அபிவிருத்தி மற்றும் ஏனைய மாற்றங்கள் இனங்காணப்பட்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது புதிய மதிப்பீடொன்று 2020 இற்குரிய கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 90,919,303 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாநகர கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வீதவரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் |

### 2.3.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 41,209,176 மற்றும் நிலுவை வீட்டு வாடகை ரூபா 2,785,093 | நிலுவை வாடகை அறவிடப்படுவதற்கு | நிலுவை வாடகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | |

**2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார நிலையங்களிலிருந்து ரூபா 3,133,878 ஆன நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

**2.3.5 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2018 திசம்பர் 31 ஆம் திகதி அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 701,645 தெகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா. 28,203,417 ஆக இருந்தது. | பெற வேண்டிய அனைத்து நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பெறப வேண்டிய வருமானம் இனங்காணப்பட்டு சரியாக எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் ஆவது பிரிவின் கீழ் 34 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டும் | இதுவரை 50 உப விதிகள் வரைவாக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டு வருகின்றது. விரைவில் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் |

**(ஆ) சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீர்ப்பாசன திணைக்களத்தினடமிருந்து முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் நகர சபையால் தனியார் நிறுவனமொன்றுக்கு தங்குமிட மட்டத்தில் அறைகளை பேணிச்செல்வதற்கு மல்வத்து ஓயாவிற்கு அருகில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குத்தகையாளரால் குறித்த நிலத்தில் 20 அறைகளை நிர்மாணித்து உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு அறை வசதிகள் வழங்கி பணம் அறவிடப்பட்டு வந்தது. | மல்வது ஓயா மற்றம் காட்டில் சகல அத்துமீறிய செயற்பாடுகளை நிறுத்தி விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக பரீட்சிக்கப்பட்டு துரிதமாக உரிய செயற்பாடுகளை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கீரிக்குளம் பிளிசறு செயற் திட்டத்திற்காக ஈடுபடுத்தப் பட்டிருந்த PD-120 ஆம் இலக்க எஸ்கவேட்டர் இயந்திரம் தீப்பிடித்தமை தொடர்பாக நடைபெற்ற ஆரம்ப விசாரணையின் பிரகாரம் இனங்காணப்பட்ட ரூபா 3.3 மில்லியனான நட்டத்தில் நான்கில் ஒரு பங்கான ரூபா 825,000 | பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக ஒழுக்காற்று கட்டளை யொன்று வழங்கப்பட்டுள்ளது |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மாநகர ஆணையாளர், கணக்காளர், நிரவாக உத்தியோகத்தர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஆகிய உத்தியோகத்தர்களிடமிருந்து விகித சமமாக அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் அப்பணத்தை குறித்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | தாபன விதிக்கோவையின் xix ஆம் அத்தியாயத்தின் 1.1 பிரிவின் பிரகாரம் அட்டவணைப்படுத்தப்பட்ட வீடொன்றாக மாநகர ஆஐணயாளருக்கு ஒதுக்கீடு செய்த வீட்டில் குடியிருந்த முன்னால் மாநகர ஆணையாளர் 2016 யூன் மாதம் முதல் அனுராதபுரம் மாநகர சபையிலிருந்து இடமாற்றம் பெற்றச் சென்றிருந்த போதும் 2019 யூன் மாதம் வரை அட்டவணைப்படுத்தப்பட்ட வீட்டிலிருந்து சென்றிருக்கவில்லை. குறித்த காலத்தை மிகைத்து இருந்த காலப்பகுதிக்காக தண்டக்கூலி அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக்கோவையின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதை புறக்கணித்த மை தொடர்பாக வாடகை மற்றும் தண்டப்பணம் அறவிடுவதற்கும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தற்போதய மாநகர ஆணையாளர் நகர வளவில் அமைந்துள்ள மாகாண சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ விடுதியில் இருப்பதற்கும் முன்னால் மாநகர ஆணையாளர் சபைக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ வீடொன்றில் தரித்திருப்பதற்கும் இந்த இரு உத்தியோகதத்ர்களின் இணக்கப்பாட்டின் பேரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) | 532 நிரந்தர மற்றும் அமைய ஊழியர்களுடன்கூடிய பதவியணியின் சம்பளத்தை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட அரச சம்பள தயாரிப்பு முறைறமை செயற்படுத்தும் போது தரவு சமூகத்தை முறையாக நிர்வாகம் | சகல கணனி முறைமைகளிலும் தரவு சமூகத்தை முறையாக நிர்வகித்தல், முறைமைக்கு தரவு உள்ளிடுதல் மற்றும் பதிவழித்தல் அதிகாரம் கட்டுப்பாட்டிற்கு | தற்போது சம்பள தயாரிப்பின் போது முறையான கட்டுப்பாட்டு முறைமை யொன்று பின்பற்றப்படுவதாக அறிய தருகின்றேன் சம்பளக் கட்டுப்பாடுக் கணக்கின் தயாரித்தல் மற்றும் சம்பள பதிவேடு பேணுதல் போன்ற கட்டுப்பாட்டு முறைமையில் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யாமை, முறைமைக்குள் ஆட்களின் பெயர் ஆரம்ப சம்பளத்தை உள்ளிடுவதை கட்டுப்படுத்தாமை அதிகாரம் காணப்படாமை மற்றும் பாதுகாப்பு காணப்படாமை, மற்றும் ஆளணி சம்பள பதிவேடு, விதவை, அநாதை ஓய்வூதிய சம்பள பதிவேடு அரச சேவைகள் சேமலாப நிதிய பதிவேடு என்பன நாளதுவரையாக்கப் படாமையால் ரூபா 40,852,190 ஆன சம்பள மோசடியொன்று இடம் பெற்றிருந்ததுடன் இந் நிதி முறைகேட்டிற்கு பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு இது வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உட்படல், உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று நாளாது வரையாக்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடு மற்றும் அறிக்கைகளை பேணுதல் சபையின் பொறுப்பொன்றாகும். இச்சம்பள மோசடி தொடர்பாக பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சம்பளம் தயாரிக்கும் போது பயன்படுத்தப்படுகின்றது. மேலும் விதவை, அநாதை ஓய்வூதிய சம்பள பதிவேடு, அரச சேவைகள் சேமலாப நிதிய பதிவேடு இதுவரை பேணப்படாமல் இருப்பதுடன் எதிர்வரும் மாதத்திலிருந்து பராமரிப்பதாக அறிய தருகின்றேன். |
| (ஈ) | முன்னால் மாநகர ஆணையாளர் உத்தியோக இல்லாத்தில் குடியிருப்பதற்காக 2009 செப்தம்பர் முதல் 2015 யூன் வரை வீட்டு வாடகை ரூபா 205,750 அறவிடப்பட்டிருக்கவில்லை. 2009 ஒக்தோபர் 13 ஆந் திகதி சபை தீர்மானத்தின் பேரில் மாநகர ஆணையாளருக்கு வாடகை கொடுப்பனவின்றி அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. | 2009 செப்தம்பர் முதல் 2016 யூன் வரை நிலுவை வீட்டு வாடகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாநகர கட்டளை சட்டத்தின் 40(1) (ஆ) சாதாரண அதிகாரத்தின் கீழ் மாநகர சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பேரில் உரிய கொடுப்பனவுமேற் கொள்ளப்பட்டிருந்தது. |
| (உ) | செலுத்த வேண்டிய பட்டியல்களை உரிய காலத்தில் தீர்வு செய்யாமையால் பட்டியல்கள் மீது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,011,953 ஆன பெறுமதி சேர் வரி ரூபா 1,011,953 தொகை மாநகர சபையினால் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு | பட்டியல்களை உரிய காலத்தில் தீர்வுசெய்யாமை தொடர்பாக பொறுப்பான தரப்பினர் இனங் காணப்பட்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மாநகர சபையால் கொடுப்பனவை பூர்தி செய்வதற்கு செயற்குழுவிற்கு தொடர்புபடுத்தப்பட்டு அந்த அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு கொடுப்பனவு செய்யும் போது ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் கடப்பதால் இந்நிலைமை உருவாகியிருந்தது. |

| | | |
|---|---|---|
| செலுத்தப்படும் பெறுமதி சேர் வரி ஈடுசெய்யப்பிடிருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | | |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 ஆரம்ப மட்ட பதவிகளில் 110 வெற்றிடங்களும் 16 இரண்டாம் மட்ட பதவிகளில் 59 வெற்றிடங்களும் 2 மூன்றாம் மட்ட பதவிகளில் 2 வெற்றிடங்களும் 2 சிரேஷ்ட மட்ட பதவிகளில் 2 வெற்றிடங்களும் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (ஆ) | 166 அமைய மற்றும் படிகள் ஊழியர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களை 24 நிரந்தர சேவையின் 24 பதவிகளில் பதில் கடமை புரிவதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். வெற்றிடங்கள் இருப்பதாக குறிப்பிட்டு அமைய அடிப்படையில் ஊழியர்களை ஆட்சேர்க்கப்பட்ட மையால் உருவாகியிருந்த ரூபா 293,031,093 ஆன வருமானத்தில் ரூபா 93,599,719 ஆன 31.5 சதவீதம் அமைய பதவியணி சம்பளமாக செலவிடப்பட்டிருந்தது. | தேவைவான பதவியணியனரை அங்கீகரித்து ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்து சபையின் சம்பள கிரயத்தை குறைப்பதற்கு நடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தேவைவான பதவியணியனரை அங்கீகரித்துக் கொள்வதற்கு டவடிக்கை எடுக்கப்படவில்லை. குறைந்தத வெற்றிடங்களோ நிரப்பப்டிருக்கவில்லை. அதன் காரணமாக இந்நிலைமை உருவாகியுள்ளது. |

**3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 495 ஊழியர்களுக்காக T-shirt வழங்கு வதற்காக ரூபா 371,250 செலவிடப்பட்டிருந்தது. | ஊழியர்களிடமிருந்து பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது சபை அங்கீகாரத்தின் பேரில் இச்செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2011 யூன் 08 ஆந் திகதிய 01/2011 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் 3.2(அ) பந்தியின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானத்தின் 80 சதவீதம் சேகரிக்கப்பட்டதன் பின்னர் சேகரிக்கப்படும் எஞ்சிய 20 சதவீத அளவு அடிப்படையில் 5 சதவீதம் மிகைக்காத வகையில் ஊக்குவிப்பு படி கொடுப்பனவு செய்ய முடியுமான போதும் 2018 ஆம் ஆண்டில் ஏனைய 04 வருமான விடயங்களில் ரூபா 20,600,000 ஆன மதிப்பிடப்பட்ட வருமானத்தில் கூடியது 20% ஆன ரூபா 4,120,000 அடிப்படையில் 5% ஆன ரேூபா 206,000 ஊக்குவிப்பு படிக்கு பதிலாக ரூபா 780,395 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 574,395 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உரிய ஊழியர்களிட மிருந்து அறவிடு வதற்கோ அல்லது கொடுப்பனவு உறுதிப் படுத்திய அல்லது கொடுப்பனவு செய்த தரப்பினர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | இந்த ஊக்குவிப்ப கொடுப்பனவு 80% இனை விஞ்சி உழைத்த 20% வருமானத்திற்கு மேலதிகமாக அறவிடப்பட்ட 100% விஞ்சிய தொகைக்காக உரிய ஊக்குவிப்பு படி சதவீதத்திற்கு சமமான நகரசபை ஊழியர்களுக்காக கொடுப்பனவு செய்வதற்கு பணக் கொடுப்பனவு பொது சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே மேற்கொள்ளப்பட்டது. |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாநகர சபைக்கு சொந்தமான இனங்காணப்பட்ட 15 வாகனங்களின் | வாகனங்களின் உரித்தினை நகர | கையேற்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | |
|---|---|---|
| உரித்து கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | |

## 3.6 இனங்காணப்படாத நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 யூலை 14 சபை முன்மொழிவு இலக்கம் 4 7(2) இன் பிரகாரம் அலுவலக கட்டிட தொகுதியின் வாடகை மாற்றம் செய்யப்படாமல் 1999 நவம்பர் 19 ஆந் திகதிய விலை மதிப்பீட்டு திணைக் களத்தினால் வழங்கப்பட்ட மதிப்பீட்டிற்கு 2004 சனவரி முதல் வாடகை அறவிடு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதும் 3 நிறுவனங்களிடமிருந்து அதனை விட குறைந்த தொகை வாடகையாக அறவிடப்பட்டமையால் 2018 திசெம்பர் 31 இல உள்ளவாறு ரூபா 8,892,000 ஆன நிதிசார் நட்டமொன்று இடம் பெற்றிருந்தது. | பொறுப்பான தரப்பினர் களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்பிற்குரிய பதில் வழங்கப்படவில்லை |
| (ஆ) | அநுராதபுரம் மாநகர சபையில் சேவை புரிந்த அலுவலக உதவியாளர் ஒருவர் 2013 ஆகஸ்ட் 19 ஆந் திகதி முதல் மாகாண பொறியியலாளர் திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்று சென்றிருந்த போதும் 2013 செப்தம்பர் மாதம் முதல் 2018 யூன் மாதம் வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 1,816,557 தொகையொன்று மாநகர சபையினால் சம்ளம் மற்றும் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | குறித்த அலுவலக உதவியாளரிடமிருந் து அல்லது கவனயீனமாக நடவடிக்கை எடுத்த தரப்பினர் களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கூடுதலான கொடுப்பனவு மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (இ) 2016 பெப்ரவரி 25 ஆந் திகிதய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த சம்பள மாறற்த்தினை சரியாக மேற்கொள்ளாமையால் கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட 11 ஊழியர்களிடமிருந்து 2017'2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூபா 231,190 சமபளம் மிகையாக கொடுப்பனவு மேற்கொள்ளபட்டிருந்தது. | மிகை சம்பள கொடுப்பனவு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கூடுதலான கொடுப்பனவு மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.7 வெளிப்படையான முறைகேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்காக சமூகமளிப்பதற்காக கொடுப்பனவு செய்யும் போது அக்குழுக்களக்கு சமூகமளிக்காத 11 உறுப்பின்களுக்காக ரூபா 97,250 படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வருகை உறுதிப்படுத்தாத தரப்பினருக்கு செய்த கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 229 ஆம் பிரிவின் கீழ் கேள்வி தொடர்பாக விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகளின் பிரகாரம் மாநகர சபை இதுவரை நவடிக்கை எடுத்து வந்தது. சபையினால் எடுக்கப்பட்ட சபை தீர்மானத்தின் பேரில் குறிதத் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 3.8 பெறுகை

#### 3.8.1 பெறுகை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் | பெறுகை திட்டமொன்று எதிர்வரும் ஆண்டில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிய தருகின்றேன் |

### 3.8.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாநகர சபை வளவில் உள்நாட்டு உணவகமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,233,480 ஆன மதிப்பீட்டின் பேரில் ரூபா 3,226,499 இற்கு தெரிவுசெய்யப்பட்டிருந்த ஒப்பந்தக்காரருக்கு வழங்கி ரூபா 5,896,935 தொகையான ஏனைய நிர்மாணங்கள் மதிப்பீடொன்றை அடிப்படையாகக் கொண்டு மற்றுமொரு ஒப்பந்தக்காரருக்கு அந்நிர்மாணம் கையளிக்கப்பட்டு நிர்மாண வேலைககள் பூர்தி செய்யப்பட்டதன் பினன்ர் அதன் வேலை பெறுமதி ரூபா 5,423,215 என உறுதிப்படுத்தப்பட்டு கொடுப்பனவு செய்தமையால் ரூபா 2,189,735 ஆன நிதிசார் நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | குறித்த நிதி நட்டம் தொடர்பாக பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பூஜை நகருக்கு திட்டமிடப்பட்ட உளநாட்டு உணவகத்தின் இடவசதிகள் நகரசபையின் முன்னால் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த (நகர சபை சிற்றுண்டிச்சாலை தவிர) இடவசதிகளை விட கூடிய இடவசதிகளுடனாக இருந்தது, எனினும் நிர்மாண நகர குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த எதிர்ப்பின் காரணமாக குறித்த செயற்திட்டத்தை செயற்படுத்தாமல் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் சகல தேவைப்பாடுகளும் பூர்த்தி செய்யப்படும் வகையில் நகர சபை வளவில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலைக்கு பதிலாக உள்நாட்டு உணவகம் நிர்மாணிக்கும் தேவைப்பாட்டில் இரண்டையும் நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாணடிற்கான ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நடாத்தப்பட வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்துவதை உறுதிப்படுத்துகின்றென் |

## 4.2 பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016,2017,2018 ஆம் ஆண்டுகளுக்குரிய அநுராதபுரம் மாநகர சபைக்கு வழங்கிய ரூபா 155,472,791 ஆன கணக்கிடக்கூடிய நிதிசார் பெறுமதியொன்றுடன் காணப்படும் 27 கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் அளித்திருக்கவில்லை. | கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் அளிக்கப்படல் வேண்டும். | கணக்காய்வு விசாரணைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் 27 கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் அளிப்பதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |